தமிழர் நேசன்

(தமிழர் கல்விச்சங்கத்துப் பத்திரிகை)

தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு—திருக்குறள்.

தொகுதி VI. { துந்துபி௵ மாசி௴ } பகுதி 11.

உனக்கு உடம்பு என்ன?

You're Not Looking Well

லண்டன்மா நகரில் பிரசுரமாகும் டைம்ஸ் பத்திரிகையின்
விசேஷவைத்திய சாஸ்திரநிருபர் எழுதியதினின்று

ஸ்ரீமான் P. N. அப்புஸ்வாமி, B.A., B.L.,
தொகுத்தெழுதியது.

அரசனையும் அவன் நடத்தும் அரசியலையும் பற்றி இகழ்ந்து பேசுவோர் தண்டனைக்கு உள்ளாவார் என்று நமது சட்டங்கள் கூறுகின்றன. அதுபோலவே பிறன் ஒருவனை இகழ்ச்சியாகப் பேசி அவனுக்குக் கெடுதல் விளைப்போரும் தண்டனைக்கு உரியராவா என்றும் அவை கூறுகின்றன இவ்வாறு தண்டனைக்கு உள்ளாக்கப்படுவோர் யாவரும் கெட்ட எண்ணம் கொண்டவராதலால் தான் அவருக்கு தண்டனை விதிக்கப்படுகிறது. ஆயினும் கெட்ட எண்ணம் கொண்டவர் மட்டுமல்ல, மற்றவரும் கெடுதல் விளைக்கக் கூடும், கெடுதல் விளைக்கவும் செய்கின்றனர் என்பது யாவரும் அறிந்த விஷயம்.

"என்னமோ போல் இருக்கிறாயே; உனக்கு உடம்பு என்ன?" என்று கேட்போர் மேற்கூறிய துர் எண்ணம் இன்றிக் கெடுதல் விளைத்துத் தண்டனைக்கு உள்ளாகாத இனத்தைச் சேர்ந்தவர். அவருக்கு என்று தனியாய்க் கீழ்வருமாறு ஒரு சட்டம் ஏற்படுத்தி, "பிறன் ஒருவனைக் கண்டபோது எவன் ஒருவன் 'உனக்கு உடம்பு என்ன? என்று கேட்கிறானோ அவன் நாட்டைவிட்டு அகற்றப்படுவான்" என்னும் விதியைக் கையாளவேண்டும். ஏனெனில் அவன் போலி நண்பன்; உண்மைச் சத்துரு அவனால் அவனிருக்கும் நாட்டுக்கே கெடுதி என்று தைரியமாய்ச் சொல்லலாம். சாதாரணமாய் மனிதர் தம்முடைய சத்துருகளுக்கே தீங்கிழைப்பர் இவனோ தனது ஆப்த நண்பனுக்குத் தீங்கிழைக்கிறான். அவனுடைய மனத்தினுள் நோயின் விதையை ஊன்றி, அதற்குத் தண்ணீர் விட்டு வளர்த்துக் காப்பாற்றுவதால் நோயானது தழைத்து வளருவதற்கு ஏதுவாகிறான்.

மேற்கூறிய விஷயங்கள் சாதாரண மனிதர்களை மட்டும் குறித்துக்கூறியவை அல்ல, வைத்தியர்களையும் சேர்த்தே கூறியது. எந்த டாக்டராவது தன்னிடம் வைத்தியம் செய்துகொள்ளும் ஒருவனைப்பார்த்து "இன்றைக்கு நீ நித்தியம் போல் இல்லையே. ஒரு மாதிரியாய் இருக்கிறாயே" என்று சொல்லுகிறானோ அவன் நோயாளிக்கு நன்மை செய்பவனல்ல இவ்வளவு சொல்லுவது போதாதென்று, சிற்சில டாக்டர்கள் தம்மிடம் வைத்தியத்துக்கு வந்த சிலருக்கு "உனக்கு இன்னும் ஆறுமாதம் தான் அதற்குள்வேண்டிய ஏற்பாடுகளை எல்லாம் செய்துகொள்ளலாம்" 'உனக்கு இன்னும் ஒரு வருஷம் தான்" என்று கூறியதும் தனக்குத்தெரியும்; அதற்குபின் இருபது வருஷகாலமாக அவர்கள் போலிநண்பர்களிடமும் நேசிநண்பர்களிடமும் பட்டுவரும் பாடும் தனக்குத்தெரியும்

என்றும்; கேலிநண்பர்கள் "என்ன இன்னும் போகவில்லே? இருக்கிருயா?" என்று கேட்டு அவர்களுடைய மனதில் கவலேயைக் கிளப்புவதையும், போலிநண்பர்கள் "இன்றைக்கு ஏன் அயர்ந்தாப்போல் இருக்கிருய்? உடம்புக்கு என்ன?" என்று கேட்டு அவர்களேப் புண்படுத்துவதையும், தான் அனேகம்தரம் பார்த்திருக்கிறதாகவும், மேற்கூறிய நிருபர் எழுதுகிருர்.

"உன்வேலேயை எல்லாம் இனிமேல் தூரக்கட்டிவைத்து விடவேண்டும். உன் உடம்பு அதை எல்லாம் தாங்காது" என்று வற்புறுத்தும் வைத்தியன் பெரும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுகிருன். சுறுசுறுப்பாய் வேலேசெய்யும் மனதை உடைய ஒரு மனிதனிடம்போய் "நீ வழக்கமாய்ச் செய்து வரும் வேலே எல்லாம் விட்டுவிட்டு நிம்மதி (நிர்மதி=கவலே யின்மை) யாய் இருக்கவேண்டும்" என்று சொல்வது "உன் காலால் தலேகீழ நில்லு" என்று சொல்வது போலவே ஆகும். ஒருவன் சாதாரணமாய்ச் செய்துவரும் தொழிலே அவனது வாழ்க்கை. வழக்கத்தால் அதே அவனுக்கு இயற்கையாகி விடுகிறது. அதைவிட்டுப் பிரிந்தால் கன்றைவிட்டு பிரிந்த தாயையும் கணவனே விட்டுப்பிரிந்த மனேவியையுமே அவனுக்கு ஒப்பாகக் கூறலாம். பிரிவு ஏற்பட்டவுடன் கவலே துணைக்கு வந்துவிடும். முயற்சியும், உழைப்பும், குழப்பமும், கிளர்ச்சியும், நமது உடல் சம்பந்தப் பட்டமட்டில் ஒரே வகையான காரியங்களேயே செய்கின்றன. முயற்சி நமது நாடியின் துடிப்பை துரிதப்படுத்துகிறது. அவ்வாறேகிளர்ச்சியும் உழைப்பால் உடலின்வலி குன்றுகிறது. அவ்வாறே குழப்பத்தாலும். வைத்தியனிடம் சீட்டுப் பெற்றபின் "அமைதியாயிருப்பவன்" ஒருவன், மெய்யாய் அமைதியாயிருப்பதில்லே. அவன் மனம் ஏங்கி, உடல் தளர்ந்து போகிருன். அவன் தன்

நிலையை உணராது வழக்கம் போல் தன்னுடைய வேலையைப் பார்த்து வந்திருந்தால் அவனுக்கு இவ்வளவு தளர்ச்சி உண்டாகாது. 'கவலை பூனையைக் கூடக் கொன்று விடும்' என்பது ஒரு ஆங்கிலப் பழமொழி. ['பூனைக்கு ஒன்பது உயிர்' என்பது இதை விளக்கும் மற்றோர் ஆங்கிலப் பழமொழி]

மேற்கூறிய நிருபர் அமெரிக்கா தேசத்துப் பெரிய வைத்தியர் ஒருவரிடம் இந்த விஷயமாய்ப் பேசினாராம். அவர் சொன்னாராம். ஒருவனிடம் உன் உடல் இனிமேல் இந்த மாதிரி வேலை செய்தால் தாங்காது. வேலையை விட்டு விடு என்று சற்றேனும் உறுதியுடன் கூறலாகாது என்பதை என் அனுபவத்தில் தெரிந்து கொண்டேன். அநேகமாக நாம் அவ்வாறு கூறுவது தப்பாகவே இருக்கிறது. தைரியமும் மனோதிடமும் வாய்ந்த சிலர் நாம் சொல்லுவதைச் சிறிதும் சட்டை பண்ணாது, வழக்கம்போல் வேலை செய்து, பேரன் பேத்தி எடுத்து சௌக்கியமாயிருந்து நம்முடைய வார்த்தையைப் பொய்யாக்கி விடுகின்றனர். கோழை நெஞ்சத்தினர்; வேறு சிலர், நம்முடைய வார்த்தையை வேதவாக்காகக் கொண்டு, கவலை மிகுந்து, ஏக்கத்தாலேயே மடிகின்றனர். ஆகையால் நான் இப்பொழுது பத்து வருஷமாக, எனக்கு சந்தேகம் இருந்தால் கூட, தைரியத்தைத் தரும் அபிப்பிராயத்தையே தான் சொல்லி வருகிறேன். நூற்றில் இரண்டு பிசகினால் பிசகுகிறதே ஒழிய, அதற்கு மேல் தப்பு ஏற்படுகிறதில்லை.

அந்த டாக்டரிடம் வைத்தியத்துக்கு வந்த பெரும்பிணியாளருள் நூற்றுக்குத் தொண்ணூற்று எட்டுப்பேர் வழக்கம் போல் தமது வேலையில் ஆழ்ந்து சந்தோஷமாய், காலம் கழித்து வந்தனர். நூற்றுக்கு இருவர் தான் அவருடைய தைரியத்தால் கஷ்டப்பட்டனர். ஆனால் அவர் பட்டது கஷ்

டம் தானே? அவரும் வழக்கம் போலவே தமது வாழ்நாட்களைக்கழித்து கவலையென்னும் கொடிய நோய்க்கு இரையாகாமல் கடைசி வரையில் சந்தோஷமாகவே இருந்தனர்.

டாக்டருடைய தீர்ப்புக்கு உள்ளாகி ஆயுள் முழுவதும் கவலைகொண்டு தத்தளிப்பதைவிட, தனக்கு உள்ளஆபத்தை அறியாது சந்தோஷமாகச் சுகவாழ்வு புரிவதை மேலாகக் கருதாதோர் உண்டோ?

இதிலிருந்து, நோயாளி ஒருவனுக்கு அவனுடைய உடலின் நிலைமை கவலையைத் தரத்தக்கதென்பதையும், அவன் முன்னை விட உடலைப் பற்றிச் சிறிது ஜாக்கிரதையுடனேயே நடந்து கொள்ளவேண்டு மென்பதையும், டாக்டர் அறிவிக்கக் கூடாதென்று சொல்லுவதாக ஊகிக்கக்கூடாது. ஜாக்கிரதையாய் இருக்கவேண்டியது அவசியம் என்பதை நோயாளிக்கு வற்புறுத்தும் போது, அவன் தைரியத்தைக் குலைக்காதபடி, அவன் மனது இடிந்து போகாதபடி, தெரிவிப்பதே புத்திசாலியான வைத்தியனுக்கு அடையாளம் தைரியம்; நம்பிக்கை என்னும் இரு தூண்களின் மேலேயே உயிர் வாழ்க்கை என்னும் அழகிய கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது.

இந்த விஷயங்களை எல்லாம் நினைக்கும்போது தற்கால வைத்தியசாஸ்திரம் அவ்வளவு திருப்திகரமாகத் தோன்றவில்லை. சோதனை, சோதனை என்று தாம்செய்யும் சோதனைகளுக்குத் தான் டாக்டர்கள் அதிக மதிப்பு வைக்கிறார்களேயொழிய, நோயாளியானவன் மனோசக்தி நிறைந்த உயர்தர உயிர்ப்பிராணியாம் மனிதன் என்பதை அவர்கள் அடிக்கடி மறந்துவிடுகிறார்கள். மனம் என்பதும் உயிரை நல்லதற்கோ அல்லது பொல்லாததற்கோ பாதிக்க வல்லதென்பதை அவர் சிற்சில வேலைகளில் உணராது போகின்றனர். நீலநிறத்

தையும் மஞ்சள் நிறத்தையும் கலந்தால் பச்சைநிறம் உண்டாகும்; நீரை அடுப்பின்மேல் வைத்தால் அது கொதித்து ஆவியாகும்: என்று கூறும் சாஸ்திரங்களைப்போல் அல்ல வைத்திய சாஸ்திரம். வைத்திய சாஸ்திர விஷயமான சங்கதிகளை ஆராயும்போது நோயாளியின் மனநிலை இன்னதென்று அறிந்துகொள்வது அவசியம். அவனது மனதானது வைத்தியனுக்குத் துணைநின்று அவனுடைய மருந்துகளோடு சேர்ந்து நோயை அடித்தாலும் அடிக்கும், அல்லது யமனுக்குத் துணைநின்று அவனது தூதுவராம் நோய்களோடு கூடி ஆளை அடித்தாலும் அடிக்கும். ஆதலால் அதைக் கவனிப்பது அவசியம்.

அதனால் தான் தைரியம் சொல்லும் டாக்டர் நோயாளிக்கு நன்மையையே செய்கிறான்; என்றும் அதைரியப்படுத்தும் வைத்தியனையும் போலி நண்பர்களையும் தீவாந்தர சிட்சைக் குள்ளாக்கவேண்டும் என்றும் மேலே கூறப்பட்டது. போலி நண்பர் நமது மனதின் திடத்தைக் குலைத்து நமது உடலின் வலியையும் சிதைத்து, நமது காப்புவரம்பை மிகவும் குறைந்துபோகச் செய்கிறார்கள். அப்பொழுது பல வகையான நோய்வித்துக்களும் நம்மைத் தாக்கி தம் வசப்படுத்தி நம்மை நோயாளிகளாக்கி விடுகின்றன.

“என் உடம்புக்கு ஒரு கெடுதலும் இல்லை. நான் சௌக்கியமாய்த் தான் இருக்கிறேன்” என்று முழுமனதுடனும் நம்பி நடந்துவருவது நல்ல வழக்கம். “எனக்கு உடம்பு ஏதோ ஒரு மாதிரியாய் இருக்கிறது” என்ற நம்பிக்கையைக் கைக்கொண்ட உடனேயே நோய் எங்கிருந்தாகிலும் ஓடி வந்து விடுகிறது.

ஆகையால் இவ்வாறு நம்மை நோய்க்கு உள்ளாக்குவோருடன் நாம் சகவாசமே வைத்துக்கொள்ளக் கூடாது. இவர்களில் சிலரை எளிதில் தெரிந்துகொள்ள ஒரு அடை

யாளம் இருக்கிறது. அஃதென்னவெனில் அவர் ஒவ்வொரு வரும் தினசு தினசாய்ப் பிரத்தியேகமான ஆகாரங்களையே தாம் உண்டுவருவதோடு, அவைமட்டிலுமே உண்ணத்தக்க ஆகாரங்கள்; எல்லாரும் குறிப்பிட்ட அந்த ஆகாரங்களைச் சாப்பிடுவதுதான் நல்லது என்று விளம்பர வேலையும் செய்து வருகின்றனர். குறிப்பிட்ட ஒரு ஆகாரத்தைச் சாப்பிட்டால்தான் ஜீரணமாகிறது என்று ஒரே ஒரு ஆகாரத்தை மட்டிலும் உண்பதிலிருந்து, அவர் பிற ஆகாரத்தை உண்ணத்தக்கவர் அல்லர், ஆதலால் அவர் முழு ஆரோக்கிய நிலையில் இல்லை என்பது வெளிப்படை.

ஆகையால்,

நோயாளைக் காண்பதுவும் நோயே திருவற்ற
நோயாள்சொற் கேட்பதுவும் நோயே—நோயாள்
குணங்க ளுரைப்பதுவும் நோயே யவரோ
டிணங்கி யிருப்பதுவும் நோய்

என்பதைக் கைப்பற்றி நடத்தலே நோய் நம்மை அணுகாது தடுத்தற்கு உரிய முக்கிய உபாயம் என்று ஒருவாறு கூறலாம்.

ஒரு சித்திரக்குள்ளன் கதை.

The Dwarf

சென்னைக் கிறிஸ்தவன் கலாசாலையில் ஆசிரியராயிருக்கும்
ஸ்ரீமான் R. ரங்காசாரியர் M. A., L. T. எழுதியது.

முன்னொரு காலத்தில் அழகி என்னும் பெயர்கொண்ட ஒரு பெண் இருந்தாள். இவ்வுலகத்தின் பல பாகங்களிலிருந்து அரசர்களும் சிற்றரசர்களும் அப்பெண்ணை விவாகம் செய்துகொள்ளவேண்டுமென்று பலவிதத்தில் முயன்றும் பயன்படாமல் திரும்பிச் செல்லவேண்டியிருந்ததென்றால் அவளுடைய அழகை நாம் என்னென்றுரைப்பது கடைசியில் தங்கச்சுரங்கமென்னும் ராஜ்யத்திற்கு அதிபதியை மணக்க அவள் சம்மதித்தாள். விவாகத்திற்கு முதல் நாள் அவ்வதிபதிக்கு நோய் கண்டது. வைத்தியர்கள் பலர் வந்து சிகிச்சை செய்தும் முடியாது வீணே திரும்பிச் சென்றனர். அந்த மணமகளின் தாய் தனது இருப்பிடத்திற்குச் சமீபத்திலிருந்த ஒரு சிறு கிராமத்துக்குச் சென்று அவ்விடத்திலிருந்த ஒரு மந்திரவாதியினிடம் மருந்து வாங்கிவரச் சென்றாள். ஆனால் அந்த கிராமம் இரண்டு சிங்கங்களால் காக்கப்பட்டிருந்தது. எவர் அங்கு வந்தாலும் அந்த சிங்கங்கள் அவர்களை விழுங்கி விடும். அதற்காக, போகிறவர்கள் சில தின்பண்டங்களைக் கொண்டு போய் அவைகளிடம் எறிந்து விட்டு அப்புறம் போவது வழக்கம். அதுபோலவே அம்மணமகளின் தாய் சென்ற பொழுது சில தின்பண்டங்களைக் கையில் கொண்டு போயிருந்தாள். அக்கிராமத்திற்கு

சமீபத்தில் சென்றதும் அவளது கால்களில் வலியுண்டாயின மையின் அவ்விடம் கொஞ்சம் உட்கார்ந்துவிட்டுப் போகலா மென்று நினைத்துச் சற்று அவ்விடம் உட்கார்ந்தாள். சற்று நேரத்திற்குப் பிறகு நித்திராதேவி அவளைத் தன் வசப் படுத்தி விட்டதால் ஒரு மரத்தடியில் படுத்துத் தூங்கினாள். பாதி நித்திரையில், அச்சிங்கங்களின் கர்ஜனையினால் திடீ ரென்று கண் திறந்தாள். கண் திறந்து பார்க்கையில் தனது குட்டையிலிருந்த தின்பண்டங்கள் காணுதலை நினைத்து வருந்தினாள். அந்த சமயத்தில் மரத்தில் உட்கார்ந்திருந்த ஒரு சித்திரக்குள்ளன் ஹா! ஹா! என்று நகைத்தான்.

மரத்தில் உட்கார்ந்திருந்த சித்திரக்குள்ளன் தின்பண் டங்கள் கையில்வைத்திருப்பதை அவள் கண்டு தனது தின் பண்டங்களைக் கொடுக்குமாறு கெஞ்சி மன்றாடினாள். அதற்கு அவள் தன்பெண்ணை அவனுக்குக் கொடுப்பதா யிருந்தால் தின்பண்டங்களைக் கொடுப்பதாகப் பதிலளித்தான்.

அந்தவேண்டுகோளுக் கிணங்க இஷ்டமில்லை. அந்த சம யத்தில் அச்சிங்கங்களும் அவள்மேற் பாயவரவே அவள் திடுக்கிட்டு அந்த வேண்டுகோளுக் கிணங்கித் தின்பண்டங் களைவாங்கி சிங்கங்களிடம் எறிந்துவிட்டு அந்த கிராமத் திற்குச் சென்றாள். அங்கு போய் அந்த மந்திரவாதியினிடம் மருந்து வாங்கி விரைவாக வீடுவந்துசேர்ந்து அந்த அரசனை சௌக்கியம் செய்தாள்.

தான் சீக்கிரத்தில் தன்னுடைய மகளுக்கும் அந்த அர சனுக்கும் விவாகத்தை முடித்துவிட்டு அந்த சித்திரக்குள் ளனை ஏமாற்றிவிட அந்த மணமகளின் தாய் எண்ணியிருந் தாள். அதற்கிணங்க விவாகத்திற்கு வேண்டிய காரியங்களெல் லாம் தயாராயின.

மணமகளும் மணமகனும் அடைந்த சந்தோஷத்தை ஊகித்து கொள்ளலாமே யன்றி எழுதிமுடியாது. இவர்கள்

இப்படியிருக்க மணமகளின் தாய் எப்பொழுது சித்திரக்குள் ளன் வந்துவிடுவானோ என்று மனம் சஞ்சலப் பட்டுக்கொண் டிருந்தாள்

சர்ச்சுக்குப் போய் விவாகம் செய்துகொள்வது கிறிஸ்த வர்கள் வழக்கம். அதுபோலவே அவர்கள் சர்ச்சுக்குச் சென்று அங்கு விவாகச் சடங்கு நடந்துகொண்டிருக்கும் பொழுது ஹா! ஹா! என்ற ஒரு சப்தம் அவர்கள்காதில் விழுந்தது. அது எவ்விடத்திலிருந்து வருகிறதென்று பலரும் நாலாபக்கங்களில் தங்களது கண்பார்வையைத் திருப்பினர். மணமகளின் தாய் சர்ச்சு உயரப்பார்த்தாள். அவ்விடம் அந்தக் குள்ளன்வாயிலின் உயர உட்கார்ந்திருப்பதைக் கண்டாள். கண்டதும் அவள் ஏதோபேச வாயைத்திறந்தாள். அவள் ஒரு வார்த்தை பேசுமுன்னமே அந்தக் குள்ளன் வந்து மணமகளுடனே மறைந்துவிட்டான்.

மணமகன் அப்படியே மயங்கி விழுந்து விட்டான். மயக் கம் தெளிந்தவுடன்தான் மந்திரவாதினியின் கிராமத்திலிருப் பதாக அறிந்தான். அந்த மந்திரவாதி அந்த அரசனைத் தானு வது மணக்கவேண்டுமென்று பலவிதத்திலும் முயற்சித்தாள். அவனுக்காகப் பெரிய விருந்துகளெல்லாம் செய்தாள். ஆனால் அவைகளில் அவனுக்கு இஷ்டமில்லாததால் வருத்தத் துடன் சமீபத்தில் இருந்த சமுத்திரக்கரையில் பகல் முழு தும் திரிந்துகொண்டிருந்தான். மறுநாள் காலை ஒரு அழகுள்ளபெண் அவனிடம் நீந்தி வந்து சேர்ந்தாள். அவள் இவனை சமீபித்ததும் அவளுக்கு மீனின் வாலிருப்பதைக் கண்டு ஒரு கடல்மாது என்று தெரிந்து கொண்டான். சித் திரக்குள்ளன் அழகி என்பவளைக் கொண்டுபோ யிருக்கும் இடத்தையும் அவளும் இவன்மாதிரி வருந்திக் கொண்டிருக் கிறாளென்றும் தன் வாலின்மீது உட்கார்ந்து கொண்டால்

அவளிடம் கொண்டுபோய் விடுவதாகவும் வாக்களித்தாள். இவன் அதற்கிணங்கவே இவனைத் தாங்கி நீந்தி அப்பெண் இருக்கும் அரண்மனையில் கொண்டு விடுத்து ஒரு வைரக் கைவாளையும் கொடுத்து அந்தவாளை எப்பொழுதும் தவற விடக்கூடாதென்றும் கூறினாள்.

அந்த அரசன் அந்த அரண்மனைக்கு சமீபத்தில் வந்ததும் நான்கு காண்டாமிருகங்கள் அவனை எதிர்த்தன. ஒரு சிந்தூர மரத்தில் சாய்ந்துகொண்டு தன்னை அந்த மிருகங்கள் குத்தவரும் சமயம் பார்த்து நகர்ந்து கொண்டான். உடனே அவற்றின் கொம்புகள் அந்தமரத்தில் சிக்கிக்கொண்டன. உடனே அவைகளைத் தன் கைவாளால் வெட்டி வீழ்த்தினன்.

அவைகளைக் கொன்றதும் கோட்டைக்கு உட்பக்கத்தில் சென்று அந்த மணமகள் இருப்பதைக் கண்டு அவள் பாதத்தில் விழுந்தான். அவன் விழும்பொழுது அவன் கையிலிருந்த கட்கம் நழுவவே அதைக் கவனித்திருந்த அந்தச் சித்திரக்குள்ளன் எடுத்துக்கொண்டு அந்தப் பெண் தன்னை விவாகம் செய்துகொண்டால் அரசனைச் சும்மா விடுவதாகவும் இல்லேல் அவனைக் கொன்று விடுவதாகவும் பயமுறுத்தினன்.

அந்தப் பெண் அதற்கு ஒப்புக்கொள்ளவே ஆனந்த சாகரத்தில் மூழ்கியிருந்த அந்தச் சித்திரக் குள்ளன் கையிலிருந்த கத்தியைத் தவறவிட்டான். அரசன் அதை எடுத்து அந்தச் சித்திரக் குள்ளனைக் கொன்று விட்டு தனது மனைவியினுடன் அவளது தாய் வீடு வந்து அரண்மனையில் மிகவும் ஆடம்பரத்துடன் விவாகத்தை நடத்திப் பிறகு சுகமாக வாழ்ந்திருந்தான்.

தாயுமானவர்
Thayumanavar.

ஸ்ரீமான் T. R. ராஜகோபால ஐயர் எழுதியது.

(தொடர்ச்சி)

இப்புவியின் மீது தோன்றி இருந்து வரும் மதங்களின் ஒற்றுமையைப் பற்றி;

"வேறுபடுஞ் சமயமெல்லாம் புகுந்து பார்க்கின்,
விளங்கும் பரம் பொருளே; நின் விளையாட்டல்லான்,
மாறுபடுங் கருத்தில்லை; முடிவின் மோன
வாரிதியி னதித்திரன் போல் வயங்கிற்றம்மா."

எனக் காட்டியிருக்கின்றன.

ஆதிகாலந்தொட்டு இந்நாள் வரையிலும் தமிழ் நாட்டில் அவதரித்துப் பாடிய கவிகளிற் பெரும் பாலாரும் தெரிவிப்பன எவையெனின்; இவ்வுலகும் உலகாதிகளும் மித்தைப் பொருட்கள்; பாலைவனத்தில் தோன்றும் கானல் நீரை யொத்தன; அஞ்ஞானம் பாசம் என்ற இருளால் மூடப்பட்டுள்ளன; இவ்விருளே நானாவித பேதகங்களை எழுப்பி போர் கொலை களவு காமம் வழக்குகளென்ற வலைகளை விரித்து, ஜீவன்களைக் கட்டி உருட்டிப் புரட்டித் திகைக்கச்செய்து வருகின்றது; இவைகளின் பொய்மையையும் அநித்தியத்தையும் உய்த்துணர்ந்து, அறநெறிகளையே தழுவிச் சுகிதம் பெறுதற்கான தெய்விகச் சக்தியை ஒவ்வோர் ஆன்மாவும் உடைத்தாயிருப்பினும், மேற்கூறியவற்றின் ஆரப்பாடங்களையும் பகட்டுக்களையும் படாடோபங்களையும் நோக்கிக் கலங்கி, அவைகள் வசப்பட்டு அலக்கணுறுகின்றது; இவ்வுலக்

விநோதங்களும் வெளியமுகும் மின்னலை யொத்தன ; இடங் காலங்களுக்குட்பட்டவை யெல்லாம் பிறப்பு வளர்ச்சி. உச்சம் தேய்வு அழிவு என்பன வாதிகளுக் கிலக்கானவை ஜீவான்மாவாகிய நதி புலன்கள் வாயிலாகக் காணவுங் கருதவுங் கூடாத வற்றுளூற்றாகிய பரமான்மாவினின்று ஆரம்பித்துக் கீழிறங்கி. இவ்வுலக வாழ்க்கையான பூமியின் மீது ஓடி, பல திறப்பட்ட ஆசாபாசங்களான உபநதிகளைப் பெற்றுப் பிரவாஹித்து, செய்கை அல்லது பலன்களான கிளைநதிகளை எங்கும் பரப்பிக் கடைசியில் மரணம் என்ற கடலுள் மறைந்து, கதிரவனால் ஆவியாக மாற்றப்பட்டு மேலெழும்பிக் கரிய மேகமாகப் பல விடங்களிலும் நிரம்பி, தனக்குத் தக்க, அல்லது தான் வேண்டப்படும், இடங்களில் ஜலத்தை வருஷித்து ஓடியோடிப் பக்குவ காலத்தில், கிளை நதிகளின் தீமை கழிந்து, உபநதிகளின் அளவு குறுகி நன்மை மேம்படவே, மேற் சொல்லிய படிக் கரிய மேகக் கூட்டங்களுடன் கலந்து அவதிப்படாது, மேன்மேலெழும்பிச் சிதாகாசத்துடன் கலந்து நிற்கின்றது.

இவ்வுல காதிகளிலெல்லாம் துவிஜகுணம் பூரித்து நிற்கின்றது. சுகத்திற்கு ஆதாரமும் துணையுமாவது துன்பமே. முயற்சியில்லாது பலனில்லை. பலனில்லாத உழைப்பில்லை. பரோபகார சிந்தனை யில்லாது வளர்ச்சியுமில்லை. ஜயமுமில்லை. இப்பரோபகார சிந்தனை (Altruism) அகப்பற்று அல்லது தற்சிந்தையினின்றே (Egotism, Selfishness) உண்டாகி வியாபிக்கின்றது. இவ்வுலக வாழ்க்கையை இனிது நடத்தல் ஓர் அரிய பெரிய வித்தையாகும்.

துறவறம் பூண்டு இருப்பதற்கு முன் துறப்பதற்கான பொருட்களை உடைத்தாயிருக்கவேண்டும், மேலும், துறப்பதற்கு முன் இவ்வுலகாதிகளின் மெய்யியல்பையும், வாழ்க்

மையின் நோக்கம் லக்ஷியங்களையும் பரிபூரணமாக அறிய வேண்டும். மனக் கலக்கம்-ஆசை என்பன வாதிகள் என்னனே வாயினும் நம்மிடமிருக்கும் வரையிலும் துறவறம் சித்திக்காது. இடமனமும், இனிய ஹிருதயமும், சிந்தனை சொற்செயற்களில் தூய்மையும் நேர்மையும், சமநோக்கமும் ஆத்மார்ப்பணமும் உள்ளவர்களுக்கு வீடுங்காடும், உயர்ந்த பர்வதமும், இருண்ட குகையும், ஜனநெருக்கமான நகரங்களும் சமமானவையாம். ஏகாந்தமாயிருக்கையில், தன்னிஷ்டப்படி இருத்தல் எளிது; மாந்தரிடையில், அவர் போக்கை அநுசரித்து ஒழுகல் சுலபம்; ஆனால், சர்வ ஜனங்களிடையிலிருக்கையிற்றானே, ஏகாந்தத்தின் இனிமையையும் மேன்மையையும் அறிந்து, தன் தீர்ந்து தெளிந்த அந்தக் கரணத்தின் ஆக்ஞைக்குக் கீழ்ப்படிந்து நடப்பவனே ஞானி, என ஓர் ஆசிரியர் உரைத்திருக்கின்றார்.

பிறரை வஞ்சிக்கவும் திகைப்புறவும் செய்யும் கல்வி மெய்க் கல்வியல்ல. அருள் வெள்ளத்தைப் பெருக்காத செல்வம் ஈயின் குணத்தை ஒத்தது,

"வித்தன்றி யாதும் விளைவதுண்டோ? நின்னருளாஞ் சித்தன்றி யாங்களுண்டோ? செப்பாய்!

"ஆரிருந்தென்? ஆர்போயென்? ஆரமுதா நின்னருளின் சீரிருந்தாலுய்வேன்; சிவமே! பராபரமே!"

"காகமானவைகோடி கூடிநின்றாலுமொரு
கல்லின்முன் னெதிர் நிற்குமோ?
கர்மமானவை கோடி முன்னே செய்தாலுநின்
கருணைப் பிரவாக வருளைத்
தாகமாய் நாடினரை வாதிக்கவல்லவோ?..."

நமது தாயுமானவர் பக்தியோகி, அல்லது அருள்ஞானி. பட்டினத்தார் கலைஞானி, அல்லது ஞானயோகி. வாழ்க்கை

யாகிய பெரியவனத்திரத்தை ஞானத்தினால் எரித்துவிட வேண்டுமெனக் கொண்டவர், பட்டினத்தார். வாழ்க்கை ஓர் கொதிக்கும் பாலைவனமாயினும் அருட் பெருக்கத்தால் அதை ஓர் இனிய உத்யான வனமாகமாற்றி, பேய்த்தேர் போன்றவை களை யெல்லாம் உண்மை வஸ்த்துக்களாகச் செய்து, வெளிப் பகட்டுடையவைகளைச் சுய அழகுடன் பிரகாசிக்கச் செய்ய வேண்டுமெனக் கொண்டவர் தாயுமானவர். இவ்வுலகச் சுக போகங்களை அநுபவித்து இயற்கையாகவே அவைகளை வெறுத்து மரணத்தை எதிர் பார்த்துக் கொண்டிருப்பவர் களுக்குப் பிடித்தமானவை பட்டினத்தாரின் உபதேசங்கள். ஆனால் நமது தாயுமானவரின் கீதங்களையோ சிறுவர், சிறு மியர், கலைஞர், மூடர, தமிழர், ஏனையோர அனைவரும் படித்துக் களிப்புறலாம். ஒவ்வொருவரும் இவ்வுலகில்படும் அவஸ்தைகளையும் அவரவர்களுக்குச் சம்பவிக்கும் இடஞ் சல்களையும், இவைகளை எளிதில் நிவர்த்திப்பதான வழியை யும் இவர் தெளிவாக விளக்குவதும், எப்பொழுதும் எம் முறைபடிப்பினும் மனவமைதியை ஊட்டுவிக்கும் குணத்தை உடைத்தாயிருப்பதுமே இதற்குக் காரணம். தற்காலத்தில், தாயுமானவருக்கு இணையாக நிற்கவல்லவர் ஸ்வாமி விவேகா நந்தர் பட்டினத்தடிகளுக்கு நிகரானவர் ஸ்வாமி ராம்தீர்த்தர்.

நானாவித சமயங்கள், சமயக்காக்ஷிகளின் தாழ்மையை யும், செல்வன், வறிஞன்—நீ நான் அவன் —மேல்கீழ் என்ற பேதங்களின் தீமையையும் இறுதி அழிவையும் எடுத்துக் காட்டி மாந்தர்க்குள் ஒற்றுமையையும், பொறுமையையும் பிதானுபோகத்தின் பெருமையையும பிரஸ்தாபித்து இனித் திருக்கச் செய்பவர் இத்தகைய மகான்களே. எவ்வறத்திலா யினும் நின்று, தன்னினத்தவர்களுக்கும் கீழ்ஜீவப் பிராணிக ளுக்கும் வேண்டிய உதவிகளை, எத்தகைய பிரதி பலனையும்

எதிர்பாராது, செய்து முடிக்க வேண்டுமெனவும், இதற்கான நற்கல்வியும், உள்ளாராய்ச்சியும், மனோ திடமும், பணிவும், சலிக்காத உழைப்பும், அன்பும் முக்கியமானவை யெனவும், ஒவ்வொருஜாதியும், சங்கமும், ஜீவான்மாவும் அவ்வதற்கான நியமங்களைத்தெளிவுற அறிந்து, உறுதியுடன்கடைப்பிடித்து, உற்சாகத்துடன் நிறைவேற்ற வேண்டுமெனவும் வற்புறுத்திச் சொல்லி நமக்குச் சாதகராவர் இப்பெரியோர்களே

சுதர்மத்தை மறந்து, அல்லது அவமதித்து பரதேச நாகரீகப் போக்குகளையும் வெளி யாடம்பரங்களையும் முற்றி லும் மேற்கொண்டு ஜீவித்தல், அல்லது ஜீவிக்கஎண்ணுதல் மண்குதிரையை நம்பி ஆற்றைக்கடத்தல், அல்லது கடக்க நினைத்தல் போலும். யாவரும் முற்றத் துறந்த முனிவர்க ளாக விடினும், (இது புகழ்ச்சிக்குரிய நல்லவென்பதைக் கவ னிக்கவும்,) புருஷர்கள் புருஷார்த்தத்தையும், ஸ்திரீகள் பெண்மையையும் கைந்நெகிழ விடக்கூடாது. புகழுக்கும் உயர்வுக்கும் அவைகளே ஆதாரமாவன. அப்பொழுதுதான் எத்தகைய சுதந்தரமும், சமத்வமும், ஒழுங்கும், சமாதான மும், சுகமும், இன்பமும் வளர்ந்து பெருகும்.